**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.89/2024 , 90/2024 , 104/2024 & 105/2024 - PW-4**

| | |
|---|---|
| Name | திரு.பாண்டியன் |
| Husband/Father Name | ராஜசேகரன் |
| Village /Area | மேலபுலம் |
| Taluk | நெமிலி |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 38 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 06.03.2026.

**(எதிரிகள் 1,2,3,4,5,7,8,9 கு.வி.மு.ச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது பனப்பாக்கத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 20.05.2020 அன்று நானும் என்னுடைய கிராம உதவியாளர் கமல் என்பவரும் அலுவலகத்திலருந்த போது பானாவரம் காவல் ஆய்வாளர் தொலைபேசியில் என்னை அழைத்தன் பேரில் நானும் எனது கிராம உதரிவாளர் கமலும் பனப்பாக்கம் பேருந்து நிறுத்ததிற்கு சென்றோம். அப்போது காவல் ஆய்வாளர் முனியான்டி, குகன், தமிழ்வானன் ஆகியோரை வழிப்பறி மற்றும் திருட்டு வழக்கு சம்மந்தமாக கைது செய்து விசாரித்து கொண்டிருந்தார். அப்போது அவரகள் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை எங்கள் முன்னிலையில் மேற்கண்ட எதிரிகள் ஒருவர் பின் ஒருவராக வாக்குமூலம் அளித்தனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடனிருந்த உதவியாளரும் சாட்சி கையொப்பம் செய்தோம். முனியான்டி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பேரில் அவர்கள் ஓட்டி வந்த Yamaha Xray வண்டி, ஒரு பேனா கத்தி மற்றும் VIVO Phone ஒன்று ஆஜர் படுத்தினார். அவற்றை எங்கள் முன்னிலையில் போலீசார் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். மேலும் குகன் வீட்டிலுள்ள வழக்க சொத்துக்களான ஒரு இரு சக்கர வாகனம் Splendor Plus மற்றும் ஒரு செல்போன் எங்கள் முன்னிலையில் அடையாளம் காட்டி ஆஜர் படுத்தினார். அவற்றை கைப்பற்றுதல் மகஜரில் போலீசார் கைப்பற்றி கொண்டார்கள். நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரிலுள்ள 1வது கையொப்பம் என்னுடையது தான். அது **அ.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

எதிரிகள் யாரும் என் அலுவலகத்துக்கு வந்து என் மூலமாக காவல் நிலையத்தில் சரண் அடையவில்லை என்று சொன்னால் சரிதான்.

என்னை அழைத்து விசாரணை செய்த காவல் ஆய்வாளர் ஆண் தான். எங்களுக்கு விடுமுறை கிடையாது. முதல் விசாரணையில் கூறிய தேதி அன்று தான் நான் கையொப்பம் இட்டு கொடுத்தேன் வேறு தேதியில் கையொப்பம் இட்டு கொடுத்திருந்தால் அது தவறு என்று சொன்னால் சரிதான்.

காவல் ஆய்வாளர் நான் கூறிய தேதியில் தான் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். என்னுடன் என் உதவியாளரும் கையொப்பம் இட்டார்.

அவரும் நான் கையொப்பமிட்ட தினத்தன்று அதே சமயத்தில் கையொப்பம் இட்டார் என்றால் சரிதான். எனது அலுவலக நேரம் காலை 10 மணி முதல் இரவு 8 மணி வரை.

நான் முதல் கையொப்பத்தை காலை 9 மணியளவில் போட்டிருப்பேன். நான் ஒரு அரசு அலுவலர் என்பதால் போலீசார் கேட்டு கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் கையொப்பம் போட்டேன் என்று சொன்னால் சரியல்ல நான் சம்பவம் நடந்த இடத்தில் தான் கையொப்பம் போட்டேன்.

விசாரணை நடத்திய இடம் பேருந்து நிறுத்தம் என்றும் அங்கு ஆட்கள் நடமாட்டம் எப்போதும் இருக்கும் என்றால் சரிதான். நான் மொத்தம் 2 கையொப்பம் போட்டேன்.

என்னுடன் எனது உதவியாளரும் 2 கையொப்பங்கள் போட்டார். நாங்கள் கையொப்பம் இடும் போது காவல் ஆய்வாளர் இருந்தார் அவருடன் எத்தனை போலீசார் இருந்தார்கள் என்று எனக்கு நியாபகம் இல்லை. நான் கையொப்பம் இட்ட தாளில் விவரங்கள் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது. நான் கையொப்பம் இட்ட 2 தாள்களிலும் விவரங்கள் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது.

ஏற்கனவே தட்டச்சு செய்திருந்த தாள்களில் தான் நான் கையொப்பம் இட்டேன். என் முன்னிலையில் விசாரணை செய்து எழுதிய தாள்களில் நான் கையொப்பம் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான்.

நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் நான் கிராம நிர்வாக அலுவலர் என்பதால் காவல் நிலையத்தில் தான் நான் போலீசார் அழைத்ததன் பேரில் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

விசாரணை செய்த இடத்தில் தான் நான் கையொப்பம் இட்டேன். என்னிடம் எதிரிகள் சரண்டர் ஆகி இருந்தால் மட்டுமே நான் அவர்கள் கொடுத்ததாக கூறப்படும் ஒப்புதல் வாக்குமுலத்தில் கையொப்பம் இட முடியும் என்றும் அவ்வாறு இல்லாமல் நான் கையொப்பம் செய்த ஆவணம் செல்லத்தக்க ஆவணம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2026.03.06 18:34:54 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.